# தலைவர் மடல்

கடந்த 30 ஜூன் 2007 அன்று முடிவுற்ற நிதியாண்டில் வரிக்கு முந்திய லாபமாக RM152.16 மில்லியன்மற்றும் வருவாய் குறிப்பேட்டில் எல்லா சமயங்களிலும் சிறந்த அடைவு நிலை சாதனையாக RM1..07 பில்லியன் கின்னஸ் எங்கர் பெர்ஹாட் பெற்றுள்ளது என்பதை உங்களுக்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.கடந்த நிதியாண்டின் வரவு தொகை RM976.01 மில்லியனில் இருந்து 9.8% உயர்ந்துள்ள வேளையில்வரிக்கு முந்திய லாபம் RM142.21 மில்லியனில் இருந்து 7% அதிகரித்துள்ளது.



டான்ஸ்ரீ சோவ் ஹூவாட் லை

## சவால்களை எதிர்கொண்டு சந்தையில் முன்னணி வகித்தல்

நமது சிறந்த நிதி நடவடிக்கையின் காரணமாக மலேசிய வருமான வரி விகிதமான 27% போக ஒவ்வொரு 50 காசு பொருளுக்கும் 32 காசு இறுதி லாபஈவு தொகையை இயக்குநர் வாரியம் பரிந்துரைத் துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்வழி கடந்த நிதியாண்டின் லாப ஈவு தொகையாக ஒவ்வொரு 50 காசு பொருளுக்கும் 45 காசு மொத்த லாபஈவு என்று பொருள்படும். கடந்த ஆண்டு லாபஈவு தொகையை விட இது 3 காசு அதிகமாகும்.



நமது சிறப்பான நிதி அடைவு நிலையைத் தொடர்ந்து, GAB தெளிவான சந்தையுடன் சிறந்த தலைமைத்துவத் தையும் பெற்றுள்ளது என்பதை பெருமையுடன் அறிவிக்க விரும்புகிறேன். மலேசிய மால்ட் சந்தையில் (MLM) 55% பங்கு வகிப்பதுடன் மொத்த மால்ட் சந்தையின் மொத்த லாபத்தில் 67% நாம் பெறுகிறோம். இது சாதாரணமான அல்லது எளிதான ஒரு காரியமல்ல.

சவால்கள் நிறைந்த சந்தை சூழலில் முயற்சியோடு இதனை அடைந்துள்ளோம். கடந்த 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மதுபானங் களுக்கான வரியை அரசாங்கம் அதிகரிக்கவில்லை எனினும், அதற்கு முந்தைய மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக வரியை உயர்த்தியதன் காரணமாக கடந்து 30 ஜூன் 2007 அன்று இச்சந்தை 1.4% சரிவு கண்டது என்பது மிகவும் வருத்தமான செய்தியாகும்.

எனினும் GAB, தன் மக்கள், தன் வர்த்தக சின்னம் மற்றும் தனது செயல்திறன் ஆகிய மூன்றும் தன் வலிமைமிக்க தூன்கள் என தன் நிறுவன தத்துவம் மற்றும் வர்த்தக வியூகம் ஆகியவற்றை மிக உறுதியாக கடைபிடித்து வருகிறது. இந்த மாறாத கொள்கை மற்றும் முயற்சி சந்தையில் சிறந்த ஒரு தலைமைத் துவத்தை நாம் அடைய உதவியது என்பதில் எனக்கு சிறிதளவேனும் ஐயம் இல்லை. மென்மேலும் பங்குசந்தையில் நாம் தொடர்ந்து வளர வேண்டும் என்பதே நமது இலக்கு.

இது நமது மொத்த வளர்ச்சி விகிதத்தைச் சார்ந்துள்ளது. ஏனெனில் இந்த வளர்ச்சியே நமது பங்குதாரர்களுக்கு நல்ல லாப ஈவு தொகைகளை வழங்கவும் நன்மையளிக்கும் நடவடிக்கைகளை புரியவும் நமது நிறுவனத் திற்கு வழிவகுக்கும்.

ஒரு நிலைத்தன்மைமிக்க அடைவு நிலையை நாம் தொடர்ந்து பெற வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். இவ்வாறு நாம் செயல்படுவதன் வழி வழி நாட்டுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் நாம் பல நன்மைகளை அளிக்க இயலும்.

மேலும், சுங்க மற்றும் வருமான வரிகள் மட்டுமல்லாது நமது பொருட்கள் வழி அனைத்துலக மதிப்பினையும் நாடு பெற முடிகிறது.

# தலைவர் மடல்




Guinness Anchor Marketing Sdn Bhd GAB
PEJABAT PEMASARAN TIMUR





இவை தவிர மனித ஆற்றல், தொழிற்சாலை மற்றும் இயந்திரம் ஆகியவற்றில் நமது தொடர்ச்சியான முதலீடு ஆகியன நாட்டின் சுற்றுலாத் துறைக்கும் ஊக்கமளிக்கிறது. அரசாங்கம் நமது துறையின் இத்தகைய பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் பீர் மற்றும் ஸ்டவுட் ஆகியவற்றுக்கான சுங்க மற்றும் வர்த்தக வரிகள் ஆகியவற்றை இனி வரும் காலங்களில் மேலும் அதிகரிக்காது என நாம் பெறிதும் நம்புகிறோம்.

நம் அனைவருக்கும் தெரிந்தது போல், நமது முன்னாள் நிர்வாக இயக்குநர் திரு. தியோ டி ரோண்ட் கடந்த மே மாதம் நம்மிடம் இருந்து விலகிவிட்டார். இந்த சிறந்த அடைவுநிலையை நாம் அடைந்ததற்கு அவரது பங்களிப்பும் மிகவும் உறுதுணையாக இருந்தது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 19 டிசம்பர் 2006ல் பதவி விலகிய திரு. குவேக் பெக் லெங் அவர்களுக்கு வாரியமும் நானும் அவருக்கு பிரியாவிடையும் அவரது பங்களிப்புகளுக்கு நன்றியும் கூறிக்கொள்ள விரும்கிறோம்.

அதே வேளையில் அவர் இடத்தை கடந்த 4 ஜனவரி 2007ல் நிரப்பிய டாக்டர் பக்லி அவர்களை நாம் மகிழ்ச்சியுடன் வரேவற்கிறோம். நிர்வாக இயக்குநராக பதவியேற்கும் திரு சார்லஸ் அயர்லாந்துவை வரவேற்பதில் நீங்களும் இணைந்திருங்கள்.




இதற்கு முன்பு சுமார் ஓராண்டு காலம் GAB யின் பொது நிர்வாகியாகவும் உயர் இயக்குநராகவும் இவர் பணியாற்றி உள்ளார். டியாகோவில் 9 ஆண்டுகளாக பல முக்கிய பொறுப்புகளை வகித்துள்ள இவர் நம் நிறுவனத்தை மேலும் சிறந்த நிலைக்கு இட்டுச் செல்வார் என நான் எதிர்பார்க்கிறேன்.

நமது நிறுவனத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு தங்களின் கடப்பாடுடன் கூடிய அர்ப்பனிப்புமிக்க உழைப்பினை வழங்கிய நமது ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு இயக்குநர் வாரியத்தின் சார்பில் நன்றிக் கூற விருப்புகிறேன். மேரும் நமது வர்த்தக சின்னத்தின் மீது அபரித நம்பிக்கை கொண்டு பல இக்கட்டான வேளைகளில் தங்களின் வற்றாத ஆதரவை நல்கிய நமது விநியோகஸ்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள் ஆகிய அனைவருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, தொடர்ச்சியானஆதரவு வழங்கி வரும் பங்குதாரர்கள் மற்றும் பங்கு உரிமையாளர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் நன்றிக் கூறிக் கொள்ள விரும்கிறேன்.

நன்றி.

டான்ஸ்ரீ சோவ் ஹுவாட் லை
தலைவர்
17 செப்டம்பர் 2007